# வேலூர் மாநகராட்சி

**வேலூர் மாநகராட்சி மைய அலுவலகத்தில் மாமன்ற கூட்ட அரங்கில் மாநகராட்சி சாதாரண கூட்டம் 22.11.2023 புதன்கிழமை அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறுகின்ற மாமன்ற கூட்டத்தில் கீழ்கண்ட மாமன்ற டேபிள் தீர்மானங்கள் கொண்டுவரப்படுகிறது.**

## மாமன்ற கூட்டப்பொருள்

**1.**வேலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளையும் உள்ளடக்கி வேலூர் முழுமைத் திட்டம் (ம) அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. 2023-2024 ஆம் ஆண்டிற்கான சட்டசபை கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் தமிழ்நாடு வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சி துறை அவர்கள் அறிவிப்பு செய்யப்பட்டதில் புராதானக் கட்டிடங்கள், பழங்கலாம் தொட்டு வளர்ச்சி அடைந்து வரும் பகுதிகள் போன்றவற்றை கண்டறிந்து அவற்றை தொடர் கட்டிட பகுதிகளாக (CBA area) குறிப்பிட்டு முழுமைத்திட்டதில் சேர்த்து நடைமுறைபடுத்த நடவடிக்கை எடுக்க தெரிவிக்கபட்டுள்ளது.

எனவே வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட பழங்கால கட்டிடங்கள் (ம) புராதானக் கட்டிடங்கள் அமையும் இடங்களை தொடர் கட்டிட பகுதியாக (CBA area) முழுமை திட்டத்தில் சேர்க்கும் பொருட்டு, வார்டு பிளாக் (ம) நகரளவு எண் வாரியான விபரங்களை வேலூர் உள்ளூர் திட்ட குழுமத்திற்கு இவ்வலுவலகம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு தற்சமயம் வேலூர் முழுமைத் திட்டதில் திட்ட அறிக்கை தயாரித்து அரசுக்கு சமர்ப்பிக்கும் நிலையில் உள்ளது. வேலூர் மாநகராட்சியில் தொடர்ச்சியான கட்டிட பகுதி (CBA area) –என பட்டியலில் கண்ட பகுதிகளை பிரசுரம் செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பட்டியலில் கண்ட பகுதிகளை தொடர்ச்சியான கட்டிட பகுதியாக (CBA area) அறிவிக்க அனுமதி வழங்கலாம்.

2. இம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அரியூர் கிராமம் S.No. 587/3B1-ல் பரப்பு 0.41 3/4 ஏக்கரில் உத்தேச மனைப்பிரிவு அமைத்து; உள்ளூர் திட்ட குழுமம் மூலம் திட்ட அனுமதி எண்.26/2023 என எண்ணிடப்பட்டு ந.க.எண். VLR/XCTJDAR2/062-23/2022/TCP தேதி: 26.06.2023-ல் வரபெற்றுள்ளது. மனுதாரர் திரு. A.ரஹமான் அவர்கள் உத்தேச மனையில் உள்ள அடிப்படை வசதிகளான சிமெண்ட் சாலை கான்கிரட் கால்வாய், கல்வெட்டு, குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து அதற்கு மூன்றாம் நபர் பரிசோதனை சான்றும் பெறப்பட்டுள்ளது. மேலும், தெருவிளக்கு அமைக்க மண்டல பொறியாளர் குறிப்பு படி ரூ.80,000/- தொகையும் 01.09.2023-ல் மாநகராட்சியில் செலுத்தப்பட்டு உள்ளது. மனைப்பிரிவில் உள்ள சாலைகள் (ம) மூல முடுக்கு ஆகியவை மாநகராட்சி ஆணையர் பெயரில் 6806/2023-ல் பத்திர பதிவு செய்யப்பட்டு உள்ளது. ஆகவே,

மேற்கண்ட சாலைகள், கால்வாய், குடிநீர் பகிர்மானக் குழாய் போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவீத மனைகள் அடைந்தபின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு உரிமையாளரை சாரும். மேற்படி பணிகளுக்கான திரும்ப செலுத்த கூடிய வைப்பு தொகை ரூ.1.00 லட்சம் (ரூபாய் ஒரு லட்சம்) ஒரு ஏக்கர் அல்லது அதன் பகுதி பரப்பளவிற்கு மனைபிரிவு உரிமையாளர் மாநகராட்சிக்கு செலுத்தவும். மேற்படி கால அளவிற்கு பின் மாநகராட்சியே பராமரிக்கவும் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. ஒப்புதல் வழங்கலாம்.
2. தெருவிளக்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.2630/எப்1/2023

**3.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN23BB 4893 Scorpio Car வாகனத்திற்கு உரிய பேட்டரி பழுது ஏற்பட்டு வாகனத்தினை இயக்க முடியாத நிலையில், புதியதாக பேட்டரி பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,000/-க்கு ஆணையர் அவர்களால் 18.11.2023-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 18.11.2022 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தாரரின் பெயர் | விலைப்புள்ளிசதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/s. Vellore Battery Centre, Vellore | ரூ.7300/- |
| 2 | M/s. The Auto Diesel Service, Vellore | ரூ.7500/- |
| 3 | M/s. Vellore Battery Care, Vellore | ரூ.7700/- |

மேற்படிபணிக்கு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவானதாக M/s. Vellore Battery Centre, Vellore ஒப்பந்ததாரர் மதிப்பீட்டுத் தொகையை விட குறைவான விலை விகிதத்தில் அளித்துள்ள விலைப்புள்ளியை ஏற்கலாம், மேலும் M/s. Vellore Battery Centre, Vellore நிறுவனத்தாரருக்கு பணியின் அவசர அவசியம் கருதி விநியோக உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு விநியோக உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.7860/2023/E1)**

**இடம் : வேலூர்**
**நாள் :21.11.2023**

**மேயர்,**
**வேலூர் மாநகராட்சி.**